தென்றல்

✵ ஆசிரியர் ✵ கண்ணதாசன் ✵

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை - 6.

மலர் 5 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1990, மாசி 16 (28-2-'59). சனிக்கிழமை | இதழ் 37

"காலக் கனவுகள் வடித்தெடுக்கும் கலைத் தளிர்! சிந்தனைக் கனிகள் பிழிந்து தரும் சுவைச்சாறு! எண்ணக் குவியலிலே கிளைத்தெழுந்த ஒளிக்கற்றை!"

"புதுமை படரும் எழில் கவிதை! வண்ணம் தவழும் கோலக்கொடி! இளமை கொழிக்கும் பிள்ளைமதி!"

பேனா நின்றுவிட்டது.

மடல்தீட்டுதலும் ஒரு கலை என்றான் ஒருவன். காலப்போக்கில் அவன் பெயரை மறந்துவிட்டேன். ஆனால் அக்கருத்தை மறக்கவில்லை. ஏன்? என் எண்ணமும் அதே வழியே சென்றிருந்தால்...... எப்படியோ! இந்த மடலைத் தொடங்குவது எப்படி என்று தெரியாமல் விழித்துக்கொண்டிருந்தேன். ஆசைகள் ஆயிரம் அலை மோதினாலும், எண்ணங்கள் திக்கெலாம் கிளைவிட்டுப் படர்ந்தாலும், திறந்த பேனாவும் விரித்த தாளுமாகத் திண்டாடினேன்.

விழிகளின் மேடை - மனத்தின் அரங்கம்-இதயத்தின் பீடம்-அவள் நினைவாலேயே நிறைந்திருந்தன. ஆனால் முத்துக் கருத்துக்கள் எழுத்து வடிவம் பெறத் திண்டாடின. இதுவரை எழுதியதையாகிலும் ஒழுங்காக எழுதியிருக்கிறேனா? திரும்பத் திரும்பப் படித்துப் பார்த்தேன். எப்படியாகிலும் முடித்து இன்றைய அஞ்சலில் சேர்ப்பித்து விட வேண்டும். இதயத்தைத் தூண்டிவிடும் தாரகைச் சிங்காரி அவளின் இதயத்தைத் தொட்டுவிட வேண்டும்! பேனா ஓடியது.

"மானே! மணியே!"

சே! பழைய வர்ணனை! கிழிந்த கந்தை! இதுவா அவளுக்கு ஏற்ற பொன்னுடை?

சலிப்புடன் தாளை வெறித்துப் பார்த்துக்கொண்டிருக்கையில், காலடிகேட்டது. "டே செல்லையா!" என்றவாறே திடீரென உள்ளே நுழைந்தான் மணித்தம்பி. தூக்கி வாரிப் போட்டது எனக்கு! காதல் பூசையில் வில்லன் புகுந்துவிட்டான் என்றல்ல; காணமுடியாத நண்பனைக் கண்டுவிட்டோமே என்ற பெருமகிழ்வு! "அப்பாடா! ஓராண்டுக்குப் பின்னுகிலும் என் நினைவு வந்ததே! ஆளே மாறிவிட்டாயடா?" என்றேன்.

"அப்படியா? உள்ளம் மட்டும் மாறவில்லை! நீ ஏண்டா இப்படி? கயசாயிட்டியா? யாருடா லைலா? கடிதம் எழுதுகிருயா?" என்றவாறே கடிதத்தை எடுக்கப் போனான்.

"கடிதம் அல்ல; காவியம் ஒன்றின் தொடக்கவுரை அது! கிடக்கட்டும். எப்போது வந்தாய் ஊரிலிருந்து? இரு, இரு! மங்கை! பலகாரம் கொண்டு வா! மணி வந்திருக்கிருன்" என்றவாறே அவனை அணைத்துக்கொண்டு உட்கார வைத்தேன்.

"உனக்கு சேதி தெரியுமோ? எங்கப்பா மாற்றலாகி இங்கே வந்து நாள் மூப்பதாய்விட்டது. உடனே இங்கே வந்து உன்னைக் காணனும்; அப்பா, அம்மாவை அறிமுகப் படுத்தி வைக்கணுமின்னு நினைச்சேன். தேர்வு இருந்து நேற்றுத்தான் முடிந்தது காலையில்தான் வந்தேன். வந்ததும் உன்னைக் காண நினைத்தேன்; வந்தேன்!" என்ருன்

"வாங்க அண்ணு!" என்று வரவேற்புக் கூறியவாறே வந்த மங்கை தந்த பலகாரத்தை இருவரும் உண்டோம். வாணித்தங்கம் வேறு பங்கெடுத்துக்கொண்டது அதில். குழந்தையின் நலத்தைக் கேட்டுக்கொண்டே உண்டவன், தங்கை மங்கை நலம் உள்படப் பலவற்றைக் கேட்டான்; பதில் சொன்னேன். இறுதியாகச் சொன்னுன். "செல்லையா! நீ என்கூட எங்க வீட்டுக்கு வா. உன்னைப்பற்றி எங்க வீட்டிலே நிறையச் சொல்லி வச்சிருக்கேன். எல்லோரும் பார்க்க ஆசைப்படுகின்றனர்!"

அவர்கள் பார்க்க ஆசைப்பட்டு என்ன பயன்? அன்று கண்ட எழிலிற்கு அழிவில்லாமல் திகழும் அவளைக் காண வேண்டும் என்று எவ்வளவு துடிக்கிறேன்? முடிகிறதா? அன்று மருத்துவக் கல்லூரிக்குத் தற்செயலாகத் தான் போனேன். தோழன் பழனியைச் சந்தித்துவிட்டுத் திரும்புகையில் வகுப்பறை உடுப்புடன் வராந்தாவில் வந்துகொண்டிருந்தாள். அவளைக் கண்டதும் என்னை மறந்தல்லவா ஒதுங்கி நின்று பார்த்தேன். மறக்கமுடியுமா? ஸ்டெதஸ் கோப்பைத் தாடையில் தட்டியவாறே தோழியருடன் பேசிக்கொண்டு வந்தாள். அவள் என்னைக் காணவில்லை தான். ஆனால் என்ன? குறும்பு தவழ அவள் சென்ற அழகை விழிகள் இன்றும் மறக்கவில்லையே! இவனோடு நான் பேசிக்கொண்டிருந்தாலும், இதயம் எதையோ புனைந்து பார்த்துக்கொண்டுதானே இருக்கிறது! அதோ அவள் தோற்றம் எதிரில் நின்று என்னைக் குத்தி விளையாடுகிறதே!

"டே, கற்பனை வாணு! புறப்படு; போகலாம். சிந்தனைக்கு முடிவு கட்டி எழு தோழா! எழு!"

கிண்டலாகப் பேசியவாறே எழுந்தான்; எழுந்தேன். தொடர்ந்தேன்!

"புது வீடு எப்பப் பிடிச்சாங்க? எப்படிப் பிடிச்சாங்க? எல்லாம் நல்லாயிருக்கா?" என்றேன், இவ்வுலகிற்கு வந்த நான்.

"எல்லாம் வசதியாகத்தான் இருக்கு. பரந்த அறைகள்; கிணறு; நல்ல மொட்டை மாடி! இத்துணை இருந்தும் அமைதிதான் இல்லை!"

"அதென்னடா விந்தை?"

"வயசுப் பெண்ணுன என் தங்கை பகல் முழுதும் கல்லூரிக்குப் போய் விடுகிருள். மாலையானு பொழுதாறக் காத்தாட மாடிக்கு வந்தால்...எங்கேயும்தான் சில தடிப்பயலுகள் இருக்காங்களே! அவ மாடிக்கு வந்தால் போதும் எங்கேயிருந்துதான் அந்தத் தடியன் வருவானே? மோப்பம் பிடிக்கிற நாய்போலக் காத்துக் கிடப்பானும்; அவள் பாட்டுக்குத் தன் போக்கில் வேறு புறம் திரும்பி நின்றாலும், இவன் கையை ஆட்டி அழைக்கிறதாம்! அவளை நோக்கிக் கடிதம் எறியட்டுமா என்கிருனும்! எங்கள் மாடியின் முன்புறமும் அவன் மாடிப் பின்புறமும் நேர் நேர் இருக்கின்றன. ஆனால் தனித் தனித் தெரு. எங்கள் தெருவுக்குப்பின் அவன் தெரு. அந்த மாடியை அப்புறம் காட்டுகிறேன் என்றிருக்கிருள். அவனைக் கையும் களவுமாகப் பிடித்துச் செம்மையாக உதைக்க வேண்டும். சில பயல்களுக்குப் பொண்ணைக் கண்டால் போதும்... உடனே காதல் பொத்துக்கொண்டு வந்துவிடுகிறது. அந்த ஜீவநதி எப்படித்தான் பெருக்கெடுக்குதோ? கண்ணே! குமரிப் பெண்ணே! என்று வர்ணனை மழை பொழியத் தொடங்குவதும், வாலை ஆட்டுவதுமாக அலைகின்றனர். அந்தப் பயலுகளெல்லாம் அக்கா-தங்கையோட பிறக்கலையா? பிறந்திருந்தா அப்படிச் செய்வானுகளா?

மேலஆவணிமூல வீதி போய்ச் சில பொருள்களை வாங்கிக் கொண்டு வீட்டுக்குப் போகலாம்!" என்றவாறே வழி திரும்பினான். நானும் தொடர்ந்தவாறே கேட்டேன்.

"ஆமா...உங்க அப்பா, அம்மாவிடம் சொல்லி அவனைக் கண்டிக்கச் செய்யக்கூடாதோ, உன் தங்கை? இல்லை, எனக்குத்தான் நீ கடிதம் எழுதியிருக்கக்கூடாதோ? என்னமோ, இளைஞர் பலர் அப்படித்தான் கெட்டுப் போகின்றனர். காதல்

இருக்க வேண்டியதுதான். அதுக்காக இப்படி அநியாயம் கூடாது.''

நான் பேசினேன், எனக்குச் சரியென்று பட்டதை. ஆனால் காதலை ஒரேயடியாகக் கண்டிக்கிறானே மணி, அதை நான் ஒப்புக்கொள்ள வியலவில்லை. நேரடியாக எப்படிச் சொல்வது? அவன்தான் உளம் நொந்து கிடக்கிறானே. வேறு வழியில் எப்படிப் பேசுவது?

''அப்பாவுக்கோ இரவு பகல் முழுதும் அலுவலகம்தான் நினைப்பு. குடும்ப நிகழ்ச்சிகளை நினைக்கக் கூட நேரமேது அவருக்கு? அம்மாவிடம்–பொறுத்துப் பொறுத்துப் பார்த்துவிட்டு நேற்றுத்தான் கூறியிருக்கிறாள். அம்மாவோ பழக்கமில்லாத இடமானதால் யார் எப்படி என்று தெரியாமல் விழிக்கிறாள்.

மா. பாண்டியன்

அதனால் 'நீ மாடிக்குப் போகாமலே இரு!' என்று சொல்லிவிட்டாள். அவள் தன்னை நொந்துகொண்டு இரு நாட்களாய்த் தன் அறையிலேயே காலம் கடத்துகிறாள். 'பெண்கள் சட்டமன்றத்திற்கு வரணும்; சபா நாயகியாய்த் திகழணும்; தொழிற்சாலைக்கு வரணும்; துறை பலவற்றிலும் அமரணும்!' என்றெல்லாம் என்னென்னவோ பேசுகின்றனர். ஆனால் தன் வீட்டு மாடிக்குக் கூட அவள் நிம்மதியாய் வரமுடியவில்லை. நீ என்ன சொல்றே? இந்த நிலைமை நீடித்தால் சமூகம் உருப்படுமா! ஏதோ அவளும் விரும்பி அவனும் விரும்பினால் காதலிக்க வேண்டியதுதான். அல்லாதபோது வளர்ற கொடியை வெட்டி எறிஞ்ச கதையா, பெண்களை நிம்மதியா இருக்கவிடாம...''

''இந்தத் தவறைச் செய்தவன் எவனாயிருந்தாலும் சும்மா விடக் கூடாது!''

இது என் முழக்கம்.

''சும்மாவா விடப்போறேன். சுக்கு நூறாக்கி, எலும்புத்தூளை அவன் கையிலே கொடுக்கப் போறேன்! என்னை யார் என்று அவனுக்குத் தெரியாது. காட்டினால்தான் மணியோட தரம் தெரியும். முத்துமீனாள் வாழ்வுதான் என் வாழ்வு! அவளுக்கு ஏற்றவனா ஒருவனை நானே தேர்ந்தெடுத்து வச்சிருக்கேன். அந்தத் தடியனை அடிச்சு நொறுக்கினபின், திருமணம் விரைவில் நடக்கத்தான் போகிறது. நான் மணமகனைத் தேர்ந்தெடுத்து அவள் ஒப்புதலையும் பெற்றுவிட்டேன். இனி அவன் ஒப்புதலைத்தான் பெற வேண்டியிருக்கிறது. என் தங்கையைப் பார்த்ததும் அவனும் ஒப்புதல் அளித்துவிடுவான். முன்னே பின்னே இல்லாவிடினும் இதன் மூலமாவது அவன் குடும்பத்திற்கும் எங்கள் குடும்பத்திற்கும் ஒரு நிலைத்த, ஆழ்ந்த உறவு ஏற்படத்தான் போகிறது. என்னை மாப்பிள்ளை வீட்டார்க்கு நன்கு தெரியும். நன்கு பிடிக்கும். அதனால் என் தங்கையையும் நேசிப்பர் என்றுதான் கருதுகிறேன். பேசுறதைவிடச் செயலிலே காட்டுவதுதான் என் ஆசை. இப்படி ஒரு கலப்பு மணம் செய்து வச்சா அமைதியா நம்ம பங்கை முடிச்சதாகிவிடும்.''

கடையில் பொருள்களை வாங்கிக்கொண்டு திரும்புகையில் அவன் படபடவென்று பேசிக்கொண்டு வந்தான். இதயம் கொதித்து வெடித்தது.

''...நிற்க, மச்சான்! இனி உங்க கருத்துதான் வேண்டும்! என்னடா சொல்றே? மன்னிக்கணும். என்ன சொல்லுறீங்க மச்சான்!'' தடுமாறி விழப் போன என்னைத் தாங்கிப் பிடித்துக்கொண்டான்.

''நாம கல்லூரி வரைக்கும் விடுதியிலே ஒன்றாவே பழகினோம். அத்தோட அந்த நட்பு விட்டுப் போகக் கூடாது. சென்னையைவிட்டு நீ மதுரைக்கு வந்துவிட்டாய். நான் கோவைக்கு வந்துவிட்டேன். என்றாலும் கோவை-மதுரைத் தொடர்பு நீடிச்சு இருக்கணும். என்ன பேசாமல் வருகிறாய்? நான் சொன்னது பிடிக்கவில்லையா?''

நெடு நாட்களுக்குப்பின் நீல வானம் வழங்கிய மழையில் நனைந்த உழவன்போல் மகிழ்ந்தாடியது என் மனம், நண்பனைக் கண்டதும். ஆனால் அவன் தன் தங்கையை மணம் செய்துகொள்ளச் சொல்கிறான். நல்லவர்தான். ஆனால் நான் கண்டவள்—நாளும் இதயத்திலே தாபத்தை உண்டாக்கியவள்—மனதை அலைக்கழிக்கும் மடக்கொடி என்னாவது? அவளை மறந்துவிடுவதா? ஆமாம்! கிட்டாத ஒன்றுக்கு ஏமாந்து ஏங்குவதைவிட, கிடைப்பதைச் சுவைப்பது அறிவுள்ள செயல் அல்லவா? அதனால்தான் எங்கோ கண்டவளை மறந்து இவளை ஏற்றுக்கொள்வது நல்லது எனப்படுகிறது. மணியின் தங்கை என்றால் அவள்



அதோ அவள் தோற்றம் என்னைக் குத்தி விளையாடுகிறதே!

அழகிற்குச் சொல்லவா வேண்டும்; பண்பும் அப்படித்தான் இருக்கும்.

யாருக்காகத் துன்பப்பட்டு மடல் எழுதத் தொடங்கினேனோ, அவளை மறந்துவிட வேண்டியதுதான். மணியின் கோரிக்கைக்கு இணங்கினால், சுவையான கனி கிடைப்பதும் உறுதி. நல்ல செயல் ஒன்றைச் செய்த அமைதியும் கிட்டும்.

அந்தச் சந்துக்குள் நுழைந்தவன் திடீரென ஒரு வீட்டின் வாயிற்படி ஏறி ''முத்து! முத்து!'' எனக் கதவைத் தட்டினான்.

''அம்மாவும் அப்பாவும் வெளியே போயிருக்கின்றனர். தங்கைமட்டும் தான் இருக்கிறாள்'' என்று சொல்கையில் ''வா அண்ணா!'' என்றவாறே வந்தவள் கதவைத் திறந்துவிட்டு என்னைப் பார்த்ததும் திடுக்கிட்டாள். ஆனால் சமாளித்துக்கொண்டாள்.

நானோ...? என்னவோ...? ஒரே குழப்பம்! மாடி—மருத்துவக் கல்லூரி–கொல்லும் சிரிப்பழகி–காவியம் அளிக்கும் கயல் விழிகள்; மணியின் தங்கையை மாடியில் பார்த்தவன்–உதைபடப் போகிறவன் - அந்தக் கயவன்; தடியன்–அய்யோ, அவன் முதுகு; மானம்...இத்தனையும் ஒரே வினாடியில் என் மூளையில் சுழன்றன. அய்யோ... அப்பா... ஒரே மின் வெட்டு...உடல்...என்ன ஆவது...?

''டே செல்லையா...டே... டே''

★

''நீங்க கோழைதான். இல்லாத போனா இப்படிப் பயந்து மயங்கி விழுவீங்களா? ஏதோ நீங்க மாடியிலே நின்று அப்பாவித்தனமாப் பார்க்கிறதைப் பார்க்கும்போதெல்லாம் என் மனமென்னவோ...சும்மா இருங்க...அண்ணா வந்திடும்!''

என் மார்பில் பூங்கொடியாய்ப் படர்ந்திருந்த அவள் காந்தள்கள் என் இதழ்களைத் தடுத்தன.

''இம்.. இம்...முத்துமீனாளே! என் மோகனமே! கொத்தலர் பூங்குழல் கோமளவல்லியே! சத்தான மொழி சிந்திச் சதிராடும் சங்கீதச் சிரிப்புப் பேரலையே! நான் பெற்றபேறு...''

என் உள்ளம் பேசியது; அவள் இதயம் கேட்டது!

''அப்படியானா...அண்ணா நாங்க இந்தத் தெருவிலேதான் குடியிருக்கோம் என்று சொல்லலையா?''

சொல்லவுமில்லை; எழுதவுமில்லை. அவன் இந்தத் தெருவுக்கும் எங்க தெருவுக்கும் வெகு தொலைவு என்று எண்ணிவிட்டானாம். நேரிலேயே வரப் போவதால் எழுத வேண்டியதில்லை என்று எண்ணினானாம்''

மறுபடியும், காவியக்கூடத்தில் சந்தைக்காரன் சரக்குடன் வருவது போல் ''முத்து! யாரு அந்தத் தடியன்? காட்டு வா, பார்க்கலாம். மாடியிலே நின்று முறைக்கிறவனுக்கு. சரியாகப் பரிசு கொடுக்கிறேன்!'' என்றவாறே உள்ளே நுழைந்தான் மணி. சமய சந்தர்ப்பம் தெரியாத பயல்!

''பரிசை அவரே எடுத்துக்கொண்டாரே...!'' என்று கண்ணைப் பொத்திக்கொண்டாள், வருங் கால டாக்டரம்மா.

இப்படியும் நடக்குமா? நடக்கத்தான் செய்தது! ★

---

3. எண்சீர் விருத்தம்.

ஓர் அடி :

முகமலரைத் தேடிவந்து நிற்ப வர்க்குன்
முடிமலரைக் காட்டுவது சரியா பெண்ணே?

முடிவு தேதி: 7-3-'59.

தென்றல் விருத்தப் போட்டி : : சென்னை - 6.

> "போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 5 ‖ 28—2—59 ‖ இதழ் 37

எங்கெங்கு காணினும் எதிர்ப்பேயடா! இது ஐந்தாண்டுத் திட்ட வாரமாமடா!

"ஓகோ, ஊராரே! ஓடி வாருங்கள்! உலகம் காணாத விந்தை! மணலைக் கயிறாய்த் திரிப்பவரென்ன—வானை வில்லாய் வளைப்பவரென்ன—கடல் நீரைக் கற்கண்டுச் சாறாய் ஆக்குவாரென்ன! கார்ப்பரேஷன் குழாய் நீரைக் காப்பித் தண்ணீராய் ஆக்குவாரென்ன—அத்துணைப் பேரும் முக்காடிட்டு மூலைக்கு ஓடினர், காண்!

இதோ, இந்தியா என்ற நந்தவனத்தில் ஓராண்டி—ஒரு வயிற்றுச் சோற்றுக்கும் வழியற்ற கோவணாண்டி, ஓர் அழகான தோண்டியைக் கொண்டு வந்திருக்கிறான் பாருங்கள். எளிதிலே கிடைத்ததா அது? இல்லை; இல்லை! காற்றிலும் மழையிலும் அலைந்து, கள்ள மார்க்கெட்டுக்கும் லஞ்ச ஊழலுக்கும் தப்பி, கண்ணேறுக்கும் கடுமொழிக்கும் விலகிக் கண்டெடுத்த ஒளி முத்தாகும் அது! அமெரிக்க மாமாவிடத்தில் டாலர் மண் பெற்று, இரஷ்யக் கரடியின் சக்கரத்தில் வைத்துச் சுற்றி வனைந்தெடுத்த அற்புதமான குடமாக்கும் அது! மண் குடமானாலும் பொன் குடத்தைவிட ஒளி சிந்திப் பிரகாசிக்கும் அந்தக் குடத்தின் பெயர்தான்—நந்தவனத்தாண்டியாம் நேரு மாமா பெற்றெடுத்த பொற் பேழையின் பெயர்தான் ஐந்தாண்டுத் திட்டம். சேர்ந்து வாருங்கள் ஜெகத்தீரே! இந்த விழி விருந்தைப் பருக, வினோதக் கலையை ரசிக்க, வீரத் திருவிளையாடலைச் சுவைக்க, அகிலத்தீரே, திரண்டு வாருங்கள்! சச்சா நேருவின் சாமர்த்தியம் அறிய, நந்தவனத்தாண்டி கூத்தாடிக் கூத்தாடிக் காட்டும் விந்தைக் குடத்தைக் காண ஓடி வாருங்கள்! விழுந்து வாருங்கள்! போனால் வராது; பொழுது விடிந்தால் இருக்காது!"

சங்கம் ஒலிக்க, மத்தளம் ஆர்க்க, துந்துபி முழங்க, துடியிடையார் ஆட, வந்தனை செய்வோர் ஒருபுறம் வாழ்த்தொலி முழக்க, வட்ட நிலா முகத்தழகியர் திரண்டு வண்ணப் பாமாலை சூட, கூத்தும் முழக்குமாக ஒரேயடியாக ஐந்தாண்டுத் திட்டத்தைத் தலையில் வைத்து ஆடுகின்றனர், வெட்டுண்ட பாரதமாதாவின் வீரச் செல்வங்கள்! காணாததைக் கண்டு விட்டனர். பரிதாபம்! கால் சோரும்மட்டும் ஆடட்டும்! அரிதாரம் கரையும் மட்டும் ஆடட்டும்!

இப்படி நாம் விட்டுவிட்டாலும், அழும் மக்களுக்கு ஐந்தாண்டுத் திட்டம் எனும் அற்புத அமுதசுரபியைக் காட்டி ஆற்றுப்படை அன்னார் பாடுவதைக் கண்டு நாம் "அறியாமைக்கு ஓர் அய்யோ!" போட்டுவிட்டாலும், சிலர் வரிந்துகொண்டு கிளம்பியிருக்கின்றனர்; "விளம்பர ஏஜண்டுகளான" காமராசர்கள் முகத்தில் "கோட்டிங்" கொடுக்கக் கிளம்பிவிட்டனர். சுவைத்தற்குரிய அவை சிந்தனையைத் தூண்டுவனவும் ஆகும்

வண்ணச் சுவரொட்டிகள் மூலமும், வாய்த் திறன் மூலமும், தில்லிப் பண்டிதர் முதல் அவர் திருவடியார் ஈறாக அனைவரும் ஏக இந்தியாவின் நலம் பெருக்கும் அருமருந்து ஐந்தாண்டுத் திட்டம் என்கின்றனர். ஆனால் "அந்த அருமருந்தைச் செரிக்கமுடியாது திண்டாடுகின்றனர் இந்திய ஏழையர்" என்று அங்கும் இங்கும் குறைபாடுகள் சுட்டப்படுகின்றன.

மருந்தைச் சரி விகிதமாகத் தென்னாட்டுக்குத் தரவில்லை என்கின்றனர், ஒரு தரப்பினர்.

மருந்து தயாரிக்கப்பட்ட முறையே தப்பானது; நோயை அழிப்பதற்குப் பதில், உயிரையே அழித்துவிடும் என்கின்றார் இன்னொருவர்.

குடத்திலுள்ள நீரை வால்சந்துக்குத் தந்த அளவு வன்னிய சிங்கத்துக்குத் தரவில்லை என்கின்றனர் ஒரு சாரார்.

"குடத்தில் விடும் நீர் வீணாகக் கீழே விழுகிறது" என்கிறார் ஒருவர். "ஐந்தாறு ஓட்டைகள்!" என்று சுட்டிக் காட்டவும் அவர் தவறவில்லை.

சீறிப் பாய்ந்து பயனில்லை; சிந்தித்துப் பார்க்க வேண்டும். பொருளியலோ, வருவாய்—செலவுக்கான வழியோ, நாட்டு வளப்பமோ—நட்டக் கணக்கின் காரணமோ அறியாதார் இதைச் சொல்லவில்லை. அன்றாடம் நாட்டு நிலையைக் கூர்ந்து கவனிப்போர்—ஆய்வுரைகள் தரவல்லார்—பதவிகளில் பல காலமும் இருக்கத் தகுந்தோர்—உருவான கருத்துரைக்க உரிமை உள்ளோர் என்றெல்லாம், ஐந்தாண்டுத் திட்டக் காவலர் தம்மால் பாராட்டப்படுவோர்தாம் சொல்கின்றனர்.

"புது வழி வகுத்த முனிபுங்கவர்; இன்னெறி தந்த ஆன்ம ஞானி; அருள் வழி, குவலயம் காக்கும் அறப்போர் தீரர்; தள்ளாத வயதிலும் அவர், சொல்லாத கருத்தில்லை; செல்லாத பாதையில்லை!"

பொன் மலர்களை யார்மீது இப்படி எல்லாம் வாரிப் பொழிகின்றனரோ, அவர்தான் கண்டனக் கணைகளைத் தொடுக்கிறார், காங்கிரசார் மீது.

"வறுமை வெய்யிலில் துடிப்பவனுக்குக் குளிர்ந்த நீரை வழங்கவில்லை, உங்கள் ஐந்தாண்டுத் திட்டத் தோண்டி. ஓட்டைகள் பலப்பல அதிலுள்ளன. அவை இல்லாமல் தயாரிக்க உங்களுக்குத் திறனில்லை" என்பதுபோல அந்த "முனிவர்"—"பூதான வேள்விக்காரர்" கூறுகிறார்: "**நானும் எண்ணிப் பார்த்தேன். என்னைப் பொறுத்தவரையில் நான்கு அல்லது ஐந்து ஓட்டைகள் உள்ள பாண்டத்தில் தண்ணீர் நிரப்புவதுபோல இந்த ஐந்தாண்டுத் திட்டங்களின் நிலைமை இருப்பதைக் காண்கிறேன்....ஆண்டொன்றுக்கு இராணுவத்திற்காக ரூ 300 கோடி; அரசின் ஊழியர்களுக்கு ரூ 200 கோடி; உணவுப் பொருள் இறக்குமதிக்காக ரூ 100 கோடி செலவிடப்பட்டு வருகிறது நமது நாட்டில்; இந்தச் செலவுகளெல்லாம் நம்முடைய அபிவிருத்திக்கென்று போடப்பட்ட திட்டங்களில் காணப்படுகின்ற பெரிய ஓட்டைகளாகும்!**"

காழ்ப்பு எரிப்புடன், கழறவில்லையாம் இதை; ஆய்ந்து ஆய்ந்து பார்த்துச் சொல்கிறாராம் வினோபா:

"நானும் எண்ணிப் பார்த்தேன்!"

வேண்டாதவற்றிற்கு ஏழையரின் குருதித் துளிகளை வாரி வாரியிறைத்துவிட்டு "வாழ்வு வளர்க்கும் இத்திட்டங்களுக்கு இந்திய மக்கள்ஒத்துழைப்புத் தரவில்லையே!" என ஒப்பாரி வைப்பதிலும் பயனில்லை என்கிறார் அவர்.

ஓட்டைகளைக் காட்டுகிறார் நிலக்கொடை பெறுபவர்; மீதி உள்ள நீரையும் எல்லோருக்குந் தருவதில்லை என்கின்றனர் வேறிருவர். காற்றோடு கலந்துவிடக்கூடிய இடங்களில் பேசவில்லை அன்னார்; கருத்துக்களைப் பொறித்து வைக்கக்கூடிய இடங்களில் பேசியிருக்கின்றனர் அவ்விருவரும்.

ஒருவர்—காங்கிரசாரால் கண்டெடுக்கப்பட்ட குண்டுமுத்து—காங்கிரசிற்குச் சென்னை சட்டமன்றில் கிடைத்துள்ள அழகிய கைதூக்கி—தேர்தல் வரும்போது மட்டும் தன்னைத் தெரியப்படுத்திக்கொள்ளும் சீராளர்—வணிகர்—கூறினார் சில பல. ஐந்தாண்டுத் திட்டங்களில் தமிழகத்திற்குப் போதிய பணம் கிடைக்கவில்லையாம்! அமைச்சர்கள் தட்டிக் கேட்டுப் பெற வேண்டுமாம்!

"நமது நாட்டை நமது நாடென்று சொல்லிக்கொள்வது என்ன தப்பு? நமது தென்னாடு முன்னேறிவிட்டது என்று சொல்வது மாபெரும் தவறு! எதிரணித் தலைவர்களையும் நம்மோடு சேர்த்துக்கொண்டு, நாம் தில்லியைத் தட்டிக் கேட்க வேண்டும்! அது தவறல்ல; தகாததல்ல! இப்படி உறுப்பினனாகிய நானும் பிறரும் கண்டித்துப் பேசுவது தப்பென்றால், அமைச்சர்களைத் தூண்டக்கூடாதென்றால், சட்ட சபை எதற்கு? வீண் கொட்டம் எதற்கு?" என்றெல்லாம் பொருள்படக் கேட்கிறார் அவர்.

"ஐந்தாண்டுத் திட்டத்தில் நமக்கு ஒதுக்கிய பணம் போதாது; இம்மாநில மந்திரிகள் டெல்லியிலே உள்ளோரிடம் அதிகமாகப் பணம் கேட்டு வாங்க வேண்டும். 'வட இந்தியா-தென்னிந்தியா என்று பேசக்கூடாது!' என்று சிலர் சொல்லலாம் அப்படிப் பேசுவதால் ஒன்றும் தவறு இல்லை"

திட்டத்தின் தீமையை இப்படி விளக்குபவர் பெயர், திடீரெனத் தென்னாட்டுத் தத்துவம் பேசுபவர் பெயர், உங்களைத் திடுக்கிட வைக்கும். அவர்தான் செட்டி நாட்டு அரசர் எனப்படும் திரு. அ. முத்தையா அவர்கள். அவர்க்குச் சட்டமன்றிலே அன்றெழுந்த ஆர்வமும் துணிவும் என்றும் நின்று நிலவுவதாகுக!

அவர் காட்டிய குற்றச்சாட்டுகளுள் அமைச்சர்களின் துணிவின்மை குறிக்கற்பாலது. அதையே நம்முடைய இழி நிலைகட்கு மூலமாகச் சுட்டிக் காட்டுகிறார் மேல் அவையில் பேசிய மற்றொருவரும்.

அவர் மிகுகற்றவர்; பெரும் புகழுற்றவர்; தகுபெயர் பெற்றவர்! காய்தல் உவத்தல் இன்றி ஆய்ந்து பார்த்து அவருரைப்பவற்றையும் தட்டிக் கழித்திட முடியாது!

அவரும் கண்டிக்கிறார் காவடி தூக்கிடும் கனம்களின் போக்கை; மந்திரிகளின் மயக்கத்தை!

அமைச்சர் பெருமக்கள் எதற்கும் தில்லிக்கோடி, திருவடி தாங்கி, பண்டிதர் உளமறிந்து, செயல்படுவதாலேயே, நமது நலமும் வளமும் நலிகின்றன என்கிறார்.

"சில ஆண்டுகளாக நடு அரசின் நடவடிக்கைகள் விரைந்து பரவி வந்திருக்கின்றன. இதனால் மாநில அரசு, தேசியப் பிரச்னைகளையும் மற்ற முக்கியப் பிரச்னைகளையும் அணுகும்போது நடு அரசைத் திருப்திப்படுத்தும் முறையிலேயே பெருமளவு கொள்கைகளை வகுக்க வேண்டியிருக்கிறது. இன்று இம்மாநில அரசு, இந்த மாநில மக்களின் நன்மைக்காகவே கொள்கையை வகுத்திருக்கிறது என்று சொல்வதற்கில்லை. நடு அரசின் கொள்கைக்குக் கீழ்ப்படிந்து, நடக்க வேண்டிய நிலையிலேயே மாநில அரசு இருக்கிறது."

இக்கருத்துரையை மேல் சட்டமன்றில் தந்திருக்கிறார் திரு. ஏ. இலட்சுமணசாமி அவர்கள்.

"திட்டம் தீட்டிவிட்டோம்; வறுமையின் கொட்டம் வாடிவிடும்?" என்றெல்லாம் கூறி ஐந்தாண்டுத் திட்ட விளம்பர வார விழாக் கொண்டாடுவோரே! கேளீர்!

"திட்டங்களில் ஓட்டைகள் மிகுதி!"

"திட்டங்களில் தென்னாட்டுக்குரிய பங்கில்லை!"

"மாநில அரசு மக்கள் நலத்தினைப் புரக்கமுடியவில்லை, நடு அரசின் குறுக்கீட்டால்!"

மூன்று கணைகள், உங்கள்மீது—ஐந்தாண்டுத் திட்ட வாரம் நடத்திப் பெருமை பேசும் உங்கள் வாய்கள் மீது பாய்கின்றன. தட்டிக் கழித்திட முடியாது; தள்ளிவிட்டிடமுடியாது! துள்ளி வருகின்ற சுடுகணைகட்குப் பதில் சொல்லாது தப்பிடமுடியாது! ★

ஊமையன் கோட்டை

— கண்ணதாசன் —

சிங்கத்தேவன் பதில் கூறவில்லை. கண்ணுத்தாள் சொன்னவற்றை அவன் நம்பத் தயாராகத்தான் இருந்தான். ஆனால் அவள் வீரத்தேவன் கண்களுக்குத் தென்பட்டு விட்டாளே; இனி எப்படி அவனோடு சேர்ந்து அவள் வாழமுடியும்? மீண்டும் கண்ணுக்குத் தெரியாமல் அவள் ஓடவேண்டும்; அவன் கொண்டு போய் அவளை மறைத்து வைக்க வேண்டும் - அப்படி நடந்தால் ஒருவேளை அவன் அவளோடு வாழமுடியும்! ஊமையன் கோட்டைப் போராட்டம் எப்பொழுது முடியுமோ? எப்படி முடியுமோ? அது முடிந்த பிறகல்லவா மீண்டும் வீரத்தேவன் கண்களுக்கு மறைந்து வாழும் திட்டத்தை அவன் போடமுடியும்! - சிங்கத்தேவன் மனம் குழம்பியவாறுதான் இருந்தது. அது மட்டுமல்ல, வீரத்தேவனை வஞ்சம் தீர்ப்பதும் அவனுடைய திட்டங்களில் ஒன்றல்லவா! அதை எப்படிச் செய்வது என்றும் அவன் யோசிக்க ஆரம்பித்தான். இந்தச் சிக்கல் நினைவுகளால்தான் கண்ணுத்தாள் பேச்சுக்கு அவன் பதில் கூறவில்லை. மௌனம் அவனைக் காப்பாற்றியது. அவன் பேசாததால், தானும் மேலே பேசாமலிருந்தாள் கண்ணுத்தாள். பின்னால் நின்றுகொண்டிருந்த வீரத்தேவன் எதையும் புரிந்துகொள்ள முடியாதவனாய் இருந்தான். சிங்கத்தேவன் கண்ணுத்தாளை விடடுவிட்டு வேறு வழியில் நடந்தான். கண்ணுத்தாள் பெருமூச்சோடு திரும்பி இரண்டடி நடந்தாள். ஆம், சிறிது தூரம்தான் நடந்திருப்பாள்! எதிரே நின்ற வீரத்தேவனைக் கண்டாள். திடுக்கிட்டாள். பின்பு சமாளித்துக்கொண்டாள். பரிதாபகரமாக அவன் முகத்தைப்பார்த்தபடி, 'அண்ணு' என்றாள். பதில் இல்லை. அவள் கண்ணீரோடு தலைகுனிந்தாள். மீண்டும் அவள் நிமிர்ந்து பார்த்தபோது வீரத்தேவன் அங்கே இல்லை. ஒரு பெருமூச்சு புறப்பட்டது கண்ணுத்தாளிடமிருந்து. கண்ணீர் ஆறெனப் பெருகியது. தான் கணவனிடம் பேசியதை அண்ணன் கேட்டிருப்பாரோ என்ற பயமும் தோன்றியது. உலகத்தில் எந்த ஒரு புழுவும் அந்தப் பாடுபடாது. அவள் மனம் அவ்வளவு தொலைப் பட்டது. நடந்தாள். ஏறக்குறைய, பிணத்தின் நிலைதான். நடைப்பிணம் என்ற வார்த்தை கண்ணுத்தாளுக்கென்றே பிறந்தது.

ஒரு அடி, இரண்டடி... கண்ணுத்தாள்... இல்லை, அந்தப் 'பிணம்' நடந்தது. தீவட்டிகள் முன்னும் பின்னும் போய்க்கொண்டிருந்தன. ஒருபுறம் சிலர் மண்பிசைந்து கொண்டிருந்தார்கள். இவை சுடுகாட்டிலும் தானே நடக்கின்றன. தெம்போடும் திராணியோடும் ஏராளமானபேர் பாடிக் கொண்டே வேலை செய்தனர். ஆனால் கண்ணுத்தாள்...?

இப்போது ஓரளவு சிந்தித்தபடி அவள் நடக்க ஆரம்பித்தாள். தான் பிறந்ததே தவறு என்று எண்ணினாள். தன்னைத் தானே நொந்து கொண்டாள். அவள் பிறந்ததற்கு அவளா காரணம்?! இத்தனைக் குணங்கள்தான், இத்தனை வழிகள்தான், இத்தனைச் சிக்கல்கள்தான், இத்தனை துயரங்கள்தான் என்று கணக்கெழுதி வைத்துக் கொண்டு யாரும் வாழ்க்கையை நடத்த முடியாது. இப்படி இப்படி நடந்தால் துயரங்களை ஒதுக்கிவிட முடியும் என்று திட்டம் போட்டுத் துவங்குகிற வாழ்க்கைகூட பல சமயங்களில் தோல்வியடைந்து விடுகிறது. தோல்வியும், கவலையும், பயமும் முழுக்க முழுக்க வராமலேயே தடுக்கப்பட முடியாதவை. துணிவிருந்தால் இவற்றைப் போக்கிவிட முடியும்! வாழ்க்கையைக் கடல் என்பார்கள். நாடகம் என்பார்கள். அவர்களெல்லாம் தங்களுக்குத் தெரிந்ததை மட்டுமே சொன்னவர்கள். முழு வாழ்க்கையையும் தெளிவாக விமர்சனம் செய்தவர்கள் இல்லை. உலகைப் படைத்தவன் எவனாக வேண்டுமானாலும் இருக்கட்டும். அப்படி ஒருவன் இருந்தால், அவனுக்கே வாழ்க்கை ஒரு பெரிய குழப்பம். உடம்பின் நரம்புகள் பல்வேறு உணர்ச்சிகளுக்கும் ஆட்படுகின்றன. நடைபெறும் நிகழ்ச்சியோ காணப்பெறும் காட்சியோ அந்த நரம்புகளில் ஏதாவது ஒன்றை அசைத்துக் கொண்டேயிருக்கிறது. பலவித உணர்ச்சிகளுக்கும் ஆட்படாதவன் மனிதனல்ல; மரம்; பிணம். உணர்ச்சிகள் இல்லாதவனை உலகம் போற்றுவதில்லை. எழும் உணர்ச்சிகளை அடக்கத் தெரிந்தவனைத்தான் ஞானி என்றோ, அறிஞன் என்றோ உலகம் போற்றுகிறது.



கொடுமைக்கும் பணியாத அஞ்சுகத்தின் தந்தை—
பூரி ராமசாமித்தேவர்.

கண்ணுத்தாள் ஞானியுமல்ல, அறிவுக்கடலுமல்ல. ஒவ்வொரு உணர்ச்சியும் அவளை ஒவ்வொரு முறை தின்று தீர்த்தது. எங்கே போவதென்ற முடிவில்லாமலேயே நடந்தாள்...நடந்தாள்...

அமைதி இழந்திருந்த வீரத்தேவன் வேலைகளிலே தன் கவனத்தைத் திருப்ப முயன்ருன். அவன் சொல்லி நடக்க வேண்டியது அங்கு ஏதாவது இருந்தால்தானே! ஒவ்வொருவரும் தங்கள் கடமையை உற்சாகத்தோடு செய்துகொண்டிருந்தார்கள். உணர்ச்சி கொண்டெழுந்து செய்யும் பணியாதலால், வேலை பார்ப்பவர்போல நடப்பவர்கள் அங்கே இல்லை. ஆகவே, யாரும் தூண்ட வேண்டிய அவசியமில்லை. அதனுல், வீரத்தேவனுக்கு வேலை இல்லை!

கோட்டை முக்கால் திட்டத்துக்குமேல் எழுந்துவிட்டது. ஊமைத்துரை மிகவும் புதிய மனிதராகவே காணப்பட்டார். ஒருபுறம் பொம்மையாவும் சுப்பம்மாவும் மண்மிதித்துக் கொண்டிருந்தார்கள். அங்கு வேலை பார்த்தவர்களிலேயே காதலும் புரிந்துகொண்டு வேலையும் பார்த்துக்கொண்டிருந்தவர்கள் அவர்கள்தான்.

வீரத்தேவன் ஒரு பனைமரத்தின் அடியில் வந்து அமர்ந்தான். தன் தங்கையைப் பற்றியே சிந்தனை செய்ய ஆரம்பித்தான். இரண்டு கரங்கள் அவன் கண்களை மூடின. அந்தக் கரங்களைப் பிரித்துவிட்டு விளையாடும் நிலையில் அவன் இல்லை. அமைதியாகவே இருந்தான். செல்லக் கோபத்தோடு கைகளை எடுத்துக்கொண்டு,'என்ன ஞாபகம்?' என்ருள் அஞ்சுகம்.பதில்இல்லை. பக்கத்தில் உட்கார்ந்தாள்.

'என்னிடம் சொல்லக் கூடாதா?'

அதற்கும் பதில் இல்லை.

'மனதைப் போட்டு ஏன் அலட்டிக் கொள்கிறீர்கள்? போரிலே வெற்றிபெறும் வரைக்காவது நிம்மதியாக இருங்களேன். நடப்பதெல்லாம் நன்மைக்கே என்று தெரியாமலா சொன்ஞர்கள்? நான் சின்னவள்தான். ஆனுலும் விடுதியிலேயே வாழ்ந்திருப்பதால் உலகத்தை நன்ருகப் புரிந்துகொண்டிருக்கிறேன். எத்தனையோ வழிப்போக்கர் குடும்பங்களைப் பார்த்திருக்கிறேன். அவர்களில் யாரும் கவலையே வாழ்க்கையாகக் கொண்டவர்களாக இல்லை. இப்படி என்னைப் பாருங்கள். பார்க்கமாட்டீர்களா? நான் போகிறேன்' என்று எழுந்தாள் - அஞ்சுகம். வீரத்தேவன் அவள் கையைப் பிடித்துக் கொண்டான். அவள் போக வேண்டாம் என்பதற்காகத்தான் கையைப் பிடித்தான். ஆனுல் அதுவே போதுமானதாக இருந்தது அவளுக்கு. மீண்டும் அவன் அருகில் உட்கார்ந்தாள். அவன் மார்பிலே சாய்ந்தாள். உணர்ச்சி இல்லாமலேயே அவன் அவளை அணைத்துக்கொண்டான். திடீரென்று கைதட்டும் ஒலி கேட்டது. அஞ்சுகம் வெட்கத்தோடு எழுந்து நின்ருள். பொம்மையாவும், சுப்பம்மாவும் அவர்களைச் சுற்றிக்கொண்டு பாடி ஆட ஆரம்பித்துவிட்டார்கள். அந்தப் பாட்டும் ஆட்டமும்தான் வீரத்தேவனுக்கு மீண்டும் உயிர் கொடுத்தன. சிரித்தான் பொம்மையாவின் கையைப் பிடித்துத் தலையில் ஓங்கிக் குட்டினுன். அஞ்சுகமும் சுப்பம்மாவும் ஒருவரையொருவர் துரத்திக்கொண்டு கோட்டைக்குள் ஓடி மறைந்தார்கள்.

பொழுது புலர்ந்தது. கோட்டை முழுக்கக் கட்டி முடிந்திருந்தது. கோட்டைக்குள்ளேயே ஏராளமான குடிசைகளையும் போட்டிருந்தார்கள். வீரர்கள் எல்லோரும் கோட்டைக்குள் குடியேறினுர்கள். வீடுகளில் தங்கியிருந்த பெண்களையும் கோட்டைக்குள் வந்துவிடுமாறு அழைத்தார் ஊமைத்துரை. எல்லோரும் வந்துவிட்டார்கள். பெண்கள் அனைவரையும் உற்றுநோக்கி வந்தார் ஊமைத்துரை. அவர்களிடையே கண்ணுத்தாள் இல்லை. அருகில் நின்ற வீரத்தேவனைப் பார்த்தார். வீரத்தேவன் சிங்கத்தேவனைப் பார்த்தான். சிங்கத்தேவனே பெருமூச்சு விட்டுவிட்டு, அங்கு போடப்பட்டிருந்த ஒரு கல்மீது அமர்ந்துகொண்டான். அதற்குமேலும் மௌனம் சாதிக்க ஊமைத்துரை விரும்பவில்லை. 'கண்ணுத்தாள் எங்கே?' என்று வீரத்தேவனைக் கேட்டார்.

'தெரியவில்லை!' என்று சாதாரணமாகப் பதில் சொன்னுன் அவன்.

அஞ்சுகத்தையும் சுப்பம்மாவையும் கேட்டார். அவர்கள் 'ராத்திரிப் பார்த்ததாக'ச் சொன்னுர்கள். ஊமைத்துரை தானும் ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு வேறு பகுதிக்குச் சென்ருர். கோட்டை முழுவதும் சிந்தனையும், அமைதியும் நிலவின.

அனைவரையும் பிரிந்த கண்ணுத்தாள், காட்டு வழியே நடந்தாள். எங்கு போகிருேம் என்று அவளுக்கே தெரியாது. யாரிடம் அடைக்கலம் தேடிப் போகிருள் என்பதும் அவளுக்குப் புரியவில்லை. நிற்பதற்கு மனம் இல்லாமல் நடந்தாள். எங்கேயாவது நின்ருல் துன்பமெல்லாம் அருகில் ஓடி வருவதுபோலிருந்தது. நடையில் அமைதி கிடைத்தது. அதனுல்தான் அவள் நடந்துகொண்டேயிருந்தாள். அது சிவகெங்கைக்குச் செல்லும் பாதை. கதிரவன் உதித்து இரண்டு நாழிகைகள் ஆகி இருக்கும். சுமார் இருபது குதிரை வீரர்கள் எதிரே வருவதைக் கண்டாள் கண்ணுத்தாள். கால்கள் தள்ளாடி விழுகின்ற நிலைமையில் அவள் இருந்தாள். கையெடுத்துக் கும்பிட்டு குதிரை வீரர்களை நிற்கச் சொன்னுள். குதிரைகள் நின்றன. ஏதோ கேட்க வாயெடுத்தாள். நாக்கு உள்ளே இழுத்துக்கொண்டது. மயங்கி வீழுந்தாள். குதிரை வீரர்கள் கீழே இறங்கினுர்கள். அவர்களுள் கம்பீரமாக இருந்த ஒருவர் கண்ணுத்தாளைத் தூக்கித் தன் மடியிலே சாய்த்துக்கொண்டார். மற்ருெருவர் குடுக்கையிலிருந்த தண்ணீரை அவள் முகத்தில் தெளித்தார். கண்ணுத்தாள் மூர்ச்சை தெளிந்தாள்.

'யாரம்மா, நீ?' என்று கேட்டார் அந்தக் கம்பீரமான மனிதர்.

'நீங்கள் யார்?' என்று நடுக்கத்தோடு திருப்பிக் கேட்டாள், கண்ணுத்தாள்.

'நாங்கள் சிறுவயலிலிருந்து வருகிருேம். பாஞ்சாலங்குறிச்சிக்குச் சென்றுகொண்டிருக்கிருேம். நீங்கள் எங்கேயம்மா போக வேண்டும்?' என்று கேட்டார் அவர்.

'எங்கே போவது என்று தெரியாமல்தான் போய்க்கொண்டிருக்கிறேன். அனுதை!' என்ருள் கண்ணுத்தாள்.

கம்பீரமான மனிதருக்குப் பக்கத்திலே இருந்த ஒருவர், 'அண்ணே! இந்த அம்மா அனுதைங்கிருங்க. இவங்களையும் பாஞ்சாலங்குறிச்சிக்குக் கூட்டிக்கிட்டுப் போவோம். நம்ம வீரத்தேவர் கிட்ட ஒப்படைச்சுடுவோம்' என்ருர்.

'வேண்டாம் ஐயா, வேண்டாம்' என்று கத்தினுள் கண்ணுத்தாள்.

தொடரும்



சின்னமருதுவின் மனைவியாள்; சிவகெங்கையின் இளையராணி பொன்னுத்தாள்.

மொழி வளர்ச்சியில் முளைத்த களைகள் !

'மொழி வளர்ச்சி' எல்லோரது கவனத்தையும் ஈர்க்கும் தலைப்பு. எண்ணமெலாம் தமிழ்; இதயமெல்லாம் தமிழுணர்வு; செயலெல்லாம் தமிழின் தனித்தன்மை - தூய்மை - கெடாவண்ணம் வளர்ப்பது என்னும் நிலையிலே உள்ள தமிழன்பர்கள் முதல், "வளர்ச்சி என்பது கலப்பால் தான் ஏற்படமுடியும்; எனவே பிற மொழிச் சொற்களைக் கொண்டு தமிழை நிரப்பி வளர்க்கவேண்டும்" என்று கூறிடும் மொழி உயர்வு அறியாதார் ஈருக எல்லாருடைய சிந்தனையிலும் சுழன்றுகொண்டிருப்பது 'மொழி வளர்ச்சி.'

மொழி வளர்ந்துகொண்டேதான் வந்திருக்கிறது. அவ்வப்போது நாகரிக மாற்றத்தாலும் விஞ்ஞான வளர்ச்சியாலும் புதிய புதிய கண்டுபிடிப்புகளும் உற்பத்திகளும் பெருகப் பெருக அவைகளைச் சுட்டிடப் புதிய சொற்கள் உருவாக்கப்பட்டு வந்திருக்கின்றன ஆனல் அச்சொற்கள் நல்ல தமிழில் வடிக்கப்படவில்லை! தமிழ் அறிஞர்களும் புலவர்களும் அக்கறை காட்டாத நிலையில் யார் யாரோ எதை எதையோ தமிழாகத் தமிழ் நூல்களிலே நுழைத்து விட்டனர்.

கல்வித் தரம் உயர உயரப் படிப்போர்களது எண்ணிக்கை பெருகிற்று. படிப்போர்களின் ஆவலை நிறைவு செய்யும் முகத்தான் நூல்கள் வெளிவரத் தொடங்கின. புரியும் வகையில் எழுதுவதாகக் கூறிக்கொண்டு நல்ல தமிழ்ச் சொற்களையெல்லாம் நீக்கிவிட்டுப் பிறமொழிச் சொற்களை நிரப்பித் தமிழ் வளர்த்த தமிழ்ப் பெரியார்களும் உண்டு. "தமிழில் பிறமொழிச் சொற்களைச் சேர்ப்பதால் அழகிருக்கிறது; அமைப்பிருக்கிறது" என்னும் கருத்து வளர்ந்துவிட்ட நிலையில் பிறமொழிச் சொற்கள் ஆயிரக்கணக்காகத் தமிழில் நுழைக்கப்படடுவிட்டன. புராணம் எழுதியோர் புகுத்தியவை; ஆட்சி மாறுதல்களில் வந்து புகுந்தவை; இடைக்காலத்தில் தமிழால் வாழ்ந்துகொண்டு தமிழுக்கே உலைவைக்கத் தமிழ்ப் பகைவர்கள் வேண்டுமென்றே சேர்த்தவை—இப்படியாகத் தமிழ் கெடுக்கப்பட்டது. எப்படியெல்லாம் புகுத்தப்பட்டிருக்கின்றன என்பதற்கு ஒருசில எடுத்துக்காட்டுகளைப் பாருங்கள்.

'பூ' என்றால் புரியாதாம்; 'மலர்' என்றால் மணக்காதாம்! 'பூ'வைப் 'புஷ்பம்' ஆக்கி அதைத் தமிழாக்குவதாகக் கூறிக்கொண்டு 'புட்பம்' என மாற்றினார்கள். 'மொழி' 'பாஷை' யாகிப் 'பாடை' என வந்து முடிந்தது. 'நீர்' 'ஜலமா'யிற்று. பள்ளியில் காலெடுத்து வைக்கும் சிறுர்கள் பயிற்சி பெறும் சொற்கள் இவை! 'வடமொழி எழுத்துக்கள் இவையிவை; பயன் இவையிவை' எனப் பயிற்சி கொடுக்கிறார்களாம்! அந்த எழுத்துக்கள் ஏன் வேண்டும்? கேட்டால் மொழியில் சொல்வளம் பெருகவாம்! நல்ல தமிழ்ச் சொற்கள் இருக்கப் பிறமொழிச் சொற்கள் சேர்ந்துதான் மொழி வளம்பெற வேண்டுமா?

தற்காலக் கண்டுபிடிப்புகளுக்குத் தமிழிலே சொற்கள் இல்லைதான். பிற மொழிகளில் மட்டுமென்ன சொற்கள் இருக்கவா செய்தன? புதிதாகத் தானே உருவாக்கப்பட்டன? அதே போன்று தமிழிலும் சொற்களை ஆக்க முடியாதா? முடியும். ஆனல் உருவாக்க வேண்டியவர்கள் உறங்கிக் கிடந்தார்கள். அவர்கள் விழிப்புடன் இருந்திருந்தால் தமிழால் தமிழ் நாட்டில் வாழும் வடமொழியிலே பற்றுக்கொண்டவர்கள் தமிழைக் கெடுக்கும்படி நேரிட்டிருக்குமா? தமிழ்ச்சொற்கள் என வடமொழி எழுத்துக்களால் ஆன "அப்ஜ ஹரிதகா அமிலம்", "நிஜபிம்பம்" போன்றபல சொற்களைப் பயமில்லாது நூல்களிலே புகுத்திய நிலை ஏற்பட்டிருக்குமா?

இடைக்காலத்திலே தமிழ்ப் பேராசிரியர்கள் சோம்பி இருந்துவிட்டார்கள். அவர்களது சோம்பேறித்தனம் தமிழின் நிலைகுலையக்காரணமாயிற்று. அவர்களது சோம்பல் தெளியவும் தூங்கிக்கிடந்த தமிழர்கள் விழித்தெழவும் தூண்டுகோலாக அமைந்தவர்கள் மறுமலர்ச்சி எழுத்தாளர்களும் பேச்சாளர்களுமே. அவர்கள்தான் தமிழின் தொன்மையையும், தனித்தன்மையையும் சொல்வளத்தையும் மக்களுக்குஎடுத்துக்காட்டியவர்கள்; தமிழிலே புகுத்தப்பட்ட பிறமொழிச் சொற்களை நீக்கி நல்ல தமிழ்ச்சொற்களை வழக்கத்திற்குக் கொண்டுவந்தவர்கள்; புதிய சொற்களை உருவாக்கித் தந்தவர்கள். விவாஹம்-திருமணம்; அக்கிராஸனுதிபதி-தலைவர்; பிரேரேபித்தல் - முன்மொழிதல்; ஆமோதித்தல்-வழிமொழிதல்; மாகாணம்-மாநிலம்; ஜில்லா-மாவட்டம்; காரியதரிசி-செயலாளர்; பொக்கிஷதார் - பொருட்காப்பாளர் இப்படிப் பலப்பலவும்; வழக்கறிஞர், வழக்குரைஞர், ஆட்சி மன்றம், வானெலி, அலுவலர், அலுவலகம் போன்ற புதிய பொருத்தமான சொற்கள் பலவும் அவர்களுடைய முயற்சியில் முகிழ்த்தவைதானே? மக்களிடையே தமிழ் உணர்ச்சியை ஊட்டியவர்கள் அவர்கள். அவர்களைப் பின்பற்றித்தான் ஆயிரமாயிரவர் தமிழ் போற்ற முன்வந்தனர். இன்று நாடு முழுவதும் தமிழ் முழக்கம் கேட்டது அவர்களது உழைப்பினுல்தான் என்றால் மிகையாகாது.

மொழி உணர்ச்சியிலே தமிழர்கள் ஒன்றுபடுவது தங்கள் வாழ்க்கைக்கு ஊறு விளைத்துவிடுமோ என்ற வேண்டாத அச்சத்தினுல் ஒருசிலர் அவ்வுணர்ச்சியை அழிக்க முற்படுகின்றனர். எப்படியாவது மக்களுக்குள் பிளவு ஏற்படுத்த வேண்டும் என்பது அவர்கள் எண்ணம். பிறமொழிக் கலப்பால்தான் ஒரு மொழி வளரும் என்று கூறவும் அதற்கென ஒரு கூட்டத்தைச் சேர்க்கவும் தங்கள் கொள்கைகளை நடைமுறைக்குக் கொண்டுவரவும் துணிகின்றனர். ஆட்டுமந்தையில் நரிகளைச் சேர்த்து எண்ணிக்கை பெருகிவிட்டதாகக் காட்டலாம் நாளடைவில் ஆடுகள் குறையும். நரிகள்தான் கொழுக்கும்.

அரசமரத்தின்மேல் காக்கை சேர்க்கும் வேப்பமுழுத்து முளைத்து வளரலாம். ஆனல் அது எப்படி அரசமரத்து வளர்ச்சியாகும்?

'பற்பல மொழிகளின் சேர்க்கையால் உருவான மொழிக்கு மொழிக் கலப்புத் தேவையாகலாம். தனியாக உருவான தனித்தியங்கும் சிறப்பைப் பெற்ற தமிழுக்கு ஏன் பிறமொழிச் சேர்க்கை வேண்டும்?' என்று கூறுபவர்களை அரசியல் போர்வைக்குள் தள்ளி மக்களிடையே அவர்களைப் பற்றித் தப்பெண்ணம் உண்டாகும்படி செய்வதே இக்கூட்டத்தினரின் உள்ளெண்ணம். இந்தக் கெடுமதியாளர்களுடன் ஒரு சில தமிழர்களும் சேர்ந்து கொண்டு பேசுவதுதான் வியப்பாக இருக்கிறது! காலம்தான் அவர்கள் கண்களைத் திறக்கவேண்டும். இக்கூட்டத்தினர் வேண்டுமென்றே தங்கள் எழுத்துக்களில் வடமொழிச் சொற்களைச் சேர்த்து எழுதுகிறார்கள். 'மொழி'யை 'பாஷை' என்றே குறிக்கிறார்கள் என்றால் பார்த்துக்கொள்ளுங்கள்.

தனித்தமிழ் என்றாலே அவர்கள் உள்ளம் கசக்கிறது. அவர்கள் தங்கள் கசப்பினைப் போக்க அரசியலில் செல்லாக்காசாகி விட்டவர்களையும், இலக்கியத் தொடர்பில்லாதவர்களையும் சேர்த்துக்கொண்டு "தமிழை வளர்த்தவர்கள்-வளர்ப்பவர்கள் நாங்கள்; மறுமலர்ச்சியாளர்கள் என்று சொல்லிக்கொள்பவர்கள் என்ன கிழித்துவிட்டார்கள்?" என்று பேசுவதுதான் விந்தையிலும் விந்தை!

தமிழ் வளரவேண்டும்; தமிழாக வளரவேண்டும். தமிழில் இருக்கும் பிறமொழிச் சொற்கள் நீக்கப்பட வேண்டும். புதிய பொருத்தமான தமிழ்ச் சொற்கள் உருவாக்கப் பெற வேண்டும். அச்சொற்கள் பயிற்சிக்கு வழக்கத்திற்கு வரும்வரை அடைப்புக் குறிகளுக்குள் தெரிந்த வேற்றுமொழிச் சொற்களைக் காட்டி வரலாம்.

'பிறமொழிச் சொற்களையே கையாண்டுவிட்டுப் போவது; உருவாக்கும் தொல்லை எதற்கு?' என்னும் பொறுப்பற்ற எண்ணம் உண்மைத் தமிழர் உளத்தே எழக்கூடாது.

வழக்கத்திற்கு வந்துவிட்டது என்பதற்காகப் பிறமொழிச் சொற்கள் மரபுடைய சொற்களாகிவிடா. பல ஆண்டுகள் குடியிருந்துவிட்டோம் என்பதனுல் நாம் வாடகை வீட்டிற்கு உரிமையாளர் ஆகிவிட முடியுமா? வழக்கத்திற்கு வந்துவிட்ட சொற்கள் தமிழில் இருக்கவேண்டும் என்று கூறுவதும் வழக்கொழிந்துவிட்டவை என்பதற்காகத் தூய தமிழ்ச் சொற்களை ஒதுக்கிவிடவேண்டும் என்று கூறுவதும் மடமை. தமிழ்ச் சொற்கள் வழக்கொழியவில்லை. வேண்டுமென்ற வழக்கத்திலிருந்து படிப்படியாக நீக்கப்பட்டன. எனவே அவை மீண்டும் உரிய இடத்தைப் பெற வேண்டும் என எண்ணுவதுதான் அறிவுடைமை. மீண்டும் அச்சொற்களை வழக்கத்திற்குக் கொண்டு வருவது முடியாத ஒன்றில்லை சென்ற சில ஆண்டுகளில் எத்துணைப் புதிய, தூய தமிழ்ச் சொற்கள் வழக்கத்திற்கு வந்திருக்கின்றன என்பதைச் சிந்தித்துப் பார்த்தால் வழக்கொழிந்த சொற்களை எளிதிலே வழக்கத்திற்கு வரும்படி செய்யமுடியும் என்ற உண்மை புலனுகும். தமிழ் பிறமொழிக் கலப்பால் வளர்ந்ததுமில்லை; வளரப்போவதுமில்லை. இதைத் தமிழர்கள் உணரவேண்டும்.

தமிழர்களிடையே குறிப்பாக இளைஞர்களிடையே ஏற்பட்டிருக்கும் தனித்தமிழ் காணும் முனைப்பான உணர்ச்சியைத் தமிழறிஞர்களும் பேராசிரியர்களும் நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும். எழுத்திலும் பேச்சிலும் நல்ல தமிழ் வழக்கத்தில் வரப்பயிற்சி அளிக்க வேண்டும். எழுத்தாளர்கள் கூடுமானவரை நல்ல தமிழில் பிழையற எழுத வேண்டும். மொழிவளர்ச்சி இவர்கள் கைகளில் தானிருக்கின்றது

அண்மையில் தமிழகத்திலுள்ள புலவர்கள் கூடித் தமிழ்காக்கப் 'புலவர்கள் குழு' அமைத்துள்ளார்கள். அக்குழு தமிழுக்கென முழுக்க முழுக்கப் பாடுபடப்போவதாக அறிகிறோம். எங்கும் தமிழுணர்ச்சி பொங்கி எழுவது ஓர் நல்ல அறிகுறி. தற்காலத்தில் நாட்டில் எழுந்துள்ள உணர்ச்சி பிறமொழிகளின் மேலுள்ள வெறுப்பால் முகிழ்த்தது அல்ல. தாய்மொழிப்பற்றால் விளைந்தது. அதற்கு அரசியல் முலாம் பூசி அழித்துவிட நினைப்போர் தாழ்வடைவர்.

"செந்தமிழே! உயிரே!
நறுந் தேனே!
செயலினை மூச்சினை
உனக்களித் தேனே
நைந்தா யெனில்நைந்து
போகுமென் வாழ்வு
நன்னிலை உனக்கெனில்
எனக்குந் தானே?"
—பாரதிதாசன்.

—புத்தனேரி ரா. வேங்கடாசலம்

ராஜபார்லி பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்குச் சிறந்த ஆகாரம்
திண்டுக்கல்ரோடு, மதுரை.

திராவிட முன்னேற்றக் கழக இலட்சியங்களைத் தாங்கி
மார்ச் 15-ந்தேதி முதல் வெளிவருகிறது!
★ முன்னேற்றம் ★
(அரசியல் சமுதாய சீர்திருத்த வார ஏடு.)
ஆசிரியர்: பால்வண்ணன்
தனிப்பிரதி 16 காசுகள். ஆண்டுச் சந்தா ரூ. 8.
ஆறுமாதச் சந்தா ரூ. 4.
எல்லா இடங்களிலும் முன்பணம் கட்டும் ஏஜண்டுகள் தேவை.
விவரங்களுக்கு:
முன்னேற்றம், 642, திருவல்லிக்கேணி ஐரோட், சென்னை-5.

?வினா - விடை

"கூடலரசன்" பதிலளிக்கிறார்

சு. ஆறுமுகம்,
சென்னைக் கம்யூனிஸ்ட்.

கம்யூனிஸ எதிர்ப்பு ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து ஏதாவது கைக்கூலி பெறுகிறீர்களா? கம்யூனிஸ்ட்களையே வசைபாடுவதின் அர்த்தம்தான் என்ன?....

எந்த ஒரு செயலுக்கும் கூலி வாங்கிக்கொள்ளும் உங்கள் கண்ணோட்டம் - கம்யூனிஸ்ட்களின் பரந்த நோக்கம், கழக மதிப்பீட்டை உணர முடியவில்லை! கேள்விகளுக்குப் பதில் சொல்லத் திராணியற்றுப் போனவர்கள், கேட்கக்கூடிய கேள்விகளும் இப்படித்தான் இருக்கமுடியும்! உங்கள் அழுகல் மொழிகளுக்குப் பின்பொருமுறை பதிலுடன் சந்திக்கிறேன், பொறுத்திருங்கள்!

★

மதுரைக் கம்யூனிஸ்ட்,
மதுரை.

படமுதலாளி கண்ணதாசனிடம் கைக்கூலியாக மாதச் சம்பளம் வாங்கிக் கம்யூனிஸ்ட் கட்சியைக் கண்டபடித் திட்டுவதால் வாழ்கிறீரா?

நான் வேறு; கவிஞர் வேறு— என்பது மாஜினிக்குப் புரியவில்லை. தி. மு. க. மயக்கம்! புரிந்துகொண்ட கம்யூனிஸ்ட்க்கு, கழகம் சம்பளம் கொடுத்து எழுத வைக்கும் பழக்கத்தை ஏற்படுத்தவில்லை என்பது தெரியவில்லை! எந்தப் பொருள் பற்றியும் எவர் வேண்டுமானாலும் எழுதலாம்; கழகத்தவராலே எழுதமுடியும்! விளம்பரத்தாலே பலமும் பணமும் பெருத கழக ஏடுகள் எழுத்தாளர்களுக்கு ஆனந்த விகடன், கல்கி போன்று கூலி தருவதில்லை! கம்யூனிஸ்ட் கட்சிப் பத்திரிகைக்கு வெளியேயிருந்து எழுத ஆள் கிடைப்பதில்லை; சம்பளத்துடன் எழுதவேண்டும்! 'தென்றல்' நிலை அப்படி அல்ல; வலிய வந்து எழுதுபவர்கள் ஏராளம்; இடம்தர இயலவில்லை என்ற ஏக்கம் தென்றலுக்கு. நான் கம்யூனிஸ்ட் கட்சியைப் பற்றி எழுதுகின்ற காரணத்தினால் உங்களுக்கு இந்தக் கெட்ட எண்ணம்; மட்டரக மனப்பான்மை. எனினும் மறந்துவிடுகிறேன். நீங்களும் புதிய இடம் பெறுங்கள். சாக்கடையில் புரளாதீர்கள்!

★

குரு. இளம்பரிதி,
சாலைக்கிராமம்.

பொதுவுடைமையர்களின் வண்டவாளத்தைத் தண்டவாளத்திலேற்றும் துணிவு தங்களுக்கு எப்படி வந்தது? கொலைக்கு அஞ்சாத அவர்கள் தொல்லை தருகிறார்களா?

கம்யூனிஸ்ட்கள் மற்றவர்கள் தங்களைப் புரிந்துகொள்ளக்கூடாதென்பதற்காகவே எளிய தமிழிலே எழுதமாட்டார்கள். அவர்கள் புத்தகத்தில் ஒருபக்கம் படித்து முடிக்கு முன் மயக்கம் வரும்! வேண்டுமானால் 'மார்க்சிய போதனைகள்' என்று வேலூர் சிறையில் கைதிகளாக இருந்த சாதாரணக் கம்யூனிஸ்ட்களுக்கு, கைதிகளாக இருந்தாலும் தலைவர்கள் என்ற தரம் குறையாத கம்யூனிஸ்ட்கள் நடத்திய அரசியல் வகுப்புக்களின் தொகுப்பைப் படித்துப் பாருங்கள்! நான் சிலவற்றை அவர்கள் கண்ணோட்டத்தில், அவர்கள் பாரம்பரியத்தில், படித்தேன். படித்தவைகளை உங்களுக்கெல்லாம் சொல்லுகிறேன். கொள்கை மாறிய நிலையில், 'அண்டர்கிரவுண்ட்' அறைகளை விட்டு வெளியேறி, மேனியிலே படிந்துவிட்ட புழுதியைத் துடைத்துவிட்டு, அமிர்தசரசில் புதிய ஜனநாயகம் படித்து, கேரளத்தில் சட்டத்திற்கு உட்பட்டு ஆட்சி நடத்தி, 'இன்குலாப் சிந்தாபாத்'தையெல்லாம் மறந்து தமிழ்வழி, மொழி பேசுகிறவர்கள், பண்புள்ளவர்களாக பறைசாற்றிக் கொள்பவர்கள், தொல்லை தருவார்கள் என்று இன்றுவரை எண்ணவில்லை, எதிர்காலம் எப்படியோ?

★

சி. என். முத்து,
பட்டுக்கோட்டை.

அரசியல், சமுதாயம், பொருளாதாரம் ஆகிய துறைகளில், கழகம் - கம்யூனிஸ்ட் கொள்கைகள் என்னென்ன?

கழகம் சொல்வது, டில்லிக்கு அடிமைப்படும் நிலை நீங்கி தனித்தியங்கும் திராவிடக் கூட்டரசு! ஏற்றத்தாழ்வுகள் எத்துறையிலும் நீக்கப்பட்டு, எல்லோர்க்கும் எல்லாம் கிடைப்பதான புதுவாழ்வில் திராவிட சமுதாயமாக இணைந்து வாழ்வது! கூட்டரசின் துணையால், உலகெங்கும் தொடர்பு கொண்டு வளம் தேடுவதும், தென்னகத்தின் வாழ்வு உயர்த்துவதும், வெளியார் தலையீட்டைத் தடுப்பதும், கனிவளம் பெருக்கிக் காலத்தை வெல்வதும். மிகச் சுருக்கம் இது. உள்ளார்ந்த விளக்கம் பெறுக! கம்யூனிஸ்ட் அரசியலுக்குச் சொந்தமாக ஒரு தாயகம் இல்லை; சொந்தமாக ஒரு மொழி இல்லை; சொந்தமாக ஒரு நாகரிகம் இல்லை; அகில இந்திய ரீதியில் கொட்டடியில் அடைபட்டு மாஸ்கோவில் அச்சாகும் திட்டங்களுக்குத் தலையாட்டல்! அவர்களுடைய சமுதாயம்-பாரத சமுதாயம் ருஷிய சமுதாயத்துடன் இரண்டறக்கலந்த இரத்த ஓட்டம் நிறைந்தது! தமிழர் உயர்வு, தமிழ் உயர்வு, திருக்குறள் விளக்கம், சங்க இலக்கிய மாண்பு இதெல்லாம் ஜீவானந்தம் அளவில் சரி, அவர் சார்ந்த கட்சி ரீதியில் தான் என்று அவராலேயே உறுதி செய்யமுடியாது! பொருளாதாரம் அவர்களுக்குச் குருஷ்சேவ் சொன்னால் புரியும்; மிக்கோயன் ஆதரித்தால் இவர்களுக்கு விளங்கும்! வடநாட்டுத் தலைவர்கள் வடக்கு வாழவில்லை; தெற்கு தழைத்துவிட்டதென்று சொன்னால் ஆட்டம் போட்டுப் பேசுவார்கள்! டில்லி ஆட்சிப்பிடியுடன் தென்னாட்டு உரிமைகளும் பொருள் வளமும் குறிக்கப்படுவதை மறந்துவிட்டு, பம்பாயிலும் ஏழைகள் இருக்கிறார்கள், உத்தரப் பிரதேசத்திலும் உழைப்போர் வர்க்கம் உண்டு. என்று பேசி மறைத்திடுவார்கள்! இன்னொருவர் பலத்திலே நடமாடும் பொய்க்கால் வீரர்கள்—இவர்களை எந்த அடிப்படையை அல்லது உறுதியை வைத்து திராவிட முன்னேற்றக் கழகத்துடன் ஒப்பிடுவது? நீங்களே சொல்லுங்கள்!

★

ஜகதீசன், மதுரை.

"தி. மு. க.வும் நிலச்சீர்திருத்தம் பேசிக்கொண்டு நிலப்பிரபுக்கள் பக்கத்திலேயே நிற்கிறது" என்று அரிவாள்சுத்தி அண்ணாச்சிகளில் ஒருவரான பி. ராமமூர்த்தி குடியாத்தம் கூட்டத்தில் பேசியிருப்பதுபற்றி உங்களது விளக்கம் என்னவோ?

ராமமூர்த்தி மட்டுமல்ல; கம்யூனிஸ்ட் தலைவர்கள் எல்லோருமே தான் இந்தக் குற்றச்சாட்டைக் கூறுகிறார்கள்! நிலப் பிரச்சினை, விவசாயிகள் கிளர்ச்சி, இப்படி எது வந்தாலும் தங்களைத் தாங்களே உயர்த்திக் கொள்வது அவர்கள் வழக்கம். மற்றவர்கள் உழவர்பற்றி உரத்த குரல் கொடுத்தாலும் இவர்களின் காதுகள் கேட்க மறுத்துவிடுகின்றன. முன்னேற்றக் கழகத்துக் கலைஞர் கருணாநிதியின் தலைமையில்தான் நங்கவரம் பகுதி விவசாயிகளின் கண்ணீரைத் துடைக்கும் காரியம் நடைபெற்றது. கம்யூனிஸ்ட்களுக்கு அங்கே வேலையில்லாமல் போய்விட்டதால் இந்தப் பொலிட்பீரோத் தோழர் குடியாத்தம் சென்று குமுறியிருக்கின்றார்! முன்னேற்றக் கழகம் உழைப்போர் பகுதியிலும் பணியாற்றுகிறது என்ற உண்மையை கம்யூனிஸ்ட்கள் அவ்வளவு சுலபத்தில் ஒப்புக்கொண்டால் அவர்களுக்கு வாழ்வேது?

★

கரிகாலன், கோவை-2.

குருஷ்சேவ் தனக்குக் கடவுள் நம்பிக்கை இல்லையென்றும் தான் ஒரு நாத்திகன் என்று கூறும்போது, அவர் துதிபாடும் காம்ரேடுகள் நாத்திகப் பிரச்சாரம் செய்வதற்கென்ன?

எந்த ஒரு நாட்டிலும் சூழ்நிலைக்கும் இடநிலைக்கும் ஏற்பக் கம்யூனிஸ்ட்கள் வேலைசெய்ய வேண்டுமென்பது லெனின் தத்துவம். தமிழ்நாட்டில் பக்திமான்கள் ஏராளம். கம்யூனிஸ்ட்களும் தங்களைப் பக்தர்களாக்கிக் கொள்கிறார்கள். மூடப் பழக்கத்தின் முடைநாற்றம் வீசுகின்ற மதுரை தெப்பக்குளத் திருவிழாவில்கூட வெட்கத்தை மறைத்துக் கொண்டு செங்கொடியுடன் உண்டியல் குலுக்கிச் சில்லரை தேடத் தவறமாட்டார்கள்! குருஷ்சேவின் சீடர்கள் வெகுஜனக் கண்ணோட்டத்துடன் பகுத்தறிவையும் பறிகொடுத்து விடுவதால் நாத்திகப் பிரச்சாரம் செய்ய முடிவதில்லை!

★

காதலடியான், திருப்பூர்.

கம்யூனிஸ்ட் கட்சிக் கிளை மாநாடுகளைப் பற்றித் தாங்கள் அறிந்த உண்மை யாது?

கம்யூனிஸ்ட் கொள்கைப் புரட்டர்கள் சாதாரணப் பொதுக்கூட்டங்களையெல்லாம் மாநாடு என்றே விளம்பரம் செய்வார்கள்! முன்பெல்லாம் கட்சி நடவடிக்கைகள் பற்றி 'ரிப்போர்ட்' செய்வதுடன் நிறுத்திக்கொள்வார்கள். ஆனால், இப்போது யாராவது ஒரு'பிரமுகர்' 'சிறப்புச் சொற்பொழிவு' நிகழ்த்தாமல் கிளை மாநாடுகள் முடிவதில்லை! திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தன் வழிகாட்டியாகக் கொண்ட தமிழரசுக்கழகம் பல செய்திகளில் கழகக் கருத்துக்களால் தன்னை 'மேக்கப்' செய்துகொண்டது போலவே, கம்யூனிஸ்ட்களும் மாவட்டம், மாநிலம், சிறப்புச்சொற்பொழிவு போன்ற சொற்களைப் போட்டு "பன்மொழிப் புலவர்"களென்று பறைசாற்றிக் கொள்கிறார்கள்! யாரை ஏய்க்க என்பீர்கள். உங்களையல்ல. ஊரை ஏய்க்க!

★

தொ. திருத்தமிழன், பிளிச்சி.

'வடக்கு வாழ்கிறது; தெற்குத் தேய்கிறது'என்ற மெய்க்குரலைக் கம்யூனிஸ்ட்கள் எப்படிக் கணக்கிடுகிறார்கள்?

அவர்களுடைய ஒட்டுமொத்தக் கண்ணோட்டத்திலும், யதார்த்த தன்மையிலும், இந்த உண்மை பொய்மையாகவே உள்ளது. இவர்கள் அகில இந்தியக் கடிவாளத்தில் சிக்கிக் கொண்டிருப்பவர்கள்! அதனால்தான் வடக்கு - தெற்கு என்று பகுத்தும் பிரித்தும் பொருளாதாரக் கணக்குப்போடக் கலங்குகிறார்கள்! வடநாட்டுக்குப் போய் வந்த 'ஜனசக்தி - முத்தையா' என்பவர்கள்கூட இந்த முறையில் தான் மதிப்பிடுகிறார்கள்! ஏகஇந்தியக் கொள்கையில் பிணவாடை இருந்தாலும் மல்லிகையின் மணம் நிறைந்துள்ளது என்று பேசுபவர்களிடத்தில் நியாயத்தை எதிர்பார்க்கலாமா?

★

செபஸ்டியன் விக்டர்,
தாம்பரம்.

கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த ரெயில்வே லேபர் யூனியன் சந்தா, நிதி, வசூல் பணம் யாரிடம் சேருகிறது? எந்த முறையில் செலவிடப்படுகிறது?

நான் சொன்னால்-ஏகாதிபத்தியக் கைக்கூலியென்பார்கள். எனவே சரியான விளக்கத்துடன் ஜனசக்திக்காரர்களான அனந்தன் நம்பியாரும் கல்யாணசுந்தரமும் தான் பதில் கூறவேண்டியவர்கள்! கூறுவார்களா?

ஜூபிடரின்
அண்ணா பத்தி
JUPITER PERFUMERS
N.S.T.V. NEETHI MOHAN, MADURAI.
எங்கும் கிடைக்கும்

பதிவு எண் : எம். 6529 28-2-59 தென்றல்

விருத்தப் போட்டி

போதின் மலர்ந்திடு பொன்னின் ஒளிர்ந்திடு
பூவை எனப்படு பேச்சும்
ஓதி யுணர்ந்திடு கல்வி யவற்ருெடும்
உண்மை தவழ்ந்திடு மன்பும்
கோதி முடித்திடு கொண்ட லெனப்படு
குஞ்சி விளைத்திடு மார்ப்பும்
காதல் விளைத்திடு மாதின் முகத்திரு
கண்ணுந் துளைத்தன நெஞ்சை
—அ கிருஷ்ணன், சரவணப்பட்டி.

★

சேதம் விளைத்திடு மின்னல் நிகர்த்திடு
செம்பொன் இடைதனைக் கண்டான்
சாதல் விளைத்திடு போரிற் கொலைசெயத்
தாவும் கொடுமுனை வேலாய்க்
காதல் விளைத்திடு மாதின் முகத்திரு
கண்ணுந் துளைத்தன நெஞ்சை!
மாதை எதிர்த்தனன்; வீரம் இழந்தனன்
மங்கை மடிதனில் வீழ்ந்தே.
—கு. மதிமன்னன்.
போடி. கயற்கண்ணிபுரம்.

★

தீது மொழிந்திடக் கூசும் இதழொடு
சிந்து படித்திடக் கெஞ்சி
காதல் விளைத்திடு மாதின் முகத்திரு
கண்ணுந் துளைத்தன நெஞ்சை!
நாத மெழுப்பிடு வீணை இசைதரு
நங்கை அருகினில் வந்தே
வாதும் புரிந்தென துள்ளங் கவர்ந்தொரு
வஞ்சிக் கொடியென நின்ருள்!
—சு. கந்தசாமி, கருப்பட்டிப்பாளையம்.

★

ஏத முடையவர் காணில் நடுக்குற
இன்னல் விளைப்பது போலே
காதல் விளைத்திடு மாதின் முகத்திரு
கண்ணும் துளைத்தன நெஞ்சை
கோதை யவள்உளம் கொண்ட குறியினைக்
கூறி விளக்கிய போது
மாது திருமுகம் நாணிச் சிவந்தது
மாலை மருவிய தாலே.
—சி பி. சாமி. திருப்பத்தூர்.

★

காதல் விளைத்திடு மாதின் முகத்திரு
கண்ணுந் துளைத்தன நெஞ்சை!
கோதில் குலமகள் காதின் குழையணி
கொல்லும் இதழினைக் கண்டேன்
ஏதும் அறிகிலர் தீதின் வழிப்பட
எய்தும் அடுதுயர் மேலாப்
போதை கொடுவொரு பேதை படர்மிகப்
புல்வாய் மறைந்தனள் மாதோ!
—தமிழரசன், மானாமதுரை.

★

நாதம் விளைத்திடும் ஓசை திளைத்திடக்
காதல் இசைத்தனள் நங்கை
கோதில் முகத்தொடு கோபை முகிழ்த்திடச்
சோர்வை அழித்தனள் மங்கை
வாதில் மனத்தொடு வாஞ்சை உதிர்த்திடப்
பாசம் வளர்த்தனள் விந்தை!
காதல் விளைத்திடு மாதின் முகத்திரு
கண்ணுந் துளைத்தன நெஞ்சை
—இராம. கணபதி, அரிமழம்.

★

காதல் விளைத்திடு மாதின் முகத்திரு
கண்ணுந் துளைத்தன நெஞ்சை.
போதை மிகுத்திடு காதல் சுரத்தினைப்
பொங்கும் படிசெயு மங்கை
நோதல் களைந்திட நோக்கும் விழிச்சுடர்
நண்ணிப் புகுந்தன தஞ்சம்
கோதில் சுகந்தரு மாதின் உடல்தனைக்
கூடிக் களித்தபின் இன்பம்.
—கோவிந்தராசன், ஈச்சங்காட்டுத்தாங்கல்.

★

நாதம் எழுப்பிடும் நல்ல கருவியை
நாடும் கலைஞனைப் போல,
வேதம் மொழிந்திட வீண மடையரை
வேண்டும் மறையவ ரன்ன,
"கூதிர்" மலரினைக் கூடி மகிழ்ந்திடக்
கொ னை யிடுவது போன்றே
காதல் வி ளத்திடு மாதின் முகத்திரு
கண் னுந் துளைத்தன நெஞ்சை;
—மு. வரதராசன், துறையூர்.

காதல் விளைத்திடு மாதின் முகத்திரு
கண்ணுந் துளைத்தன நெஞ்சை
சாதல் தடுத்திடுஞ் சேதி விடுத்தது
சேரும் இதழ்க்கிடைச் செஞ்சொல்
"சாதி குறுக்கிடும் வாழ்வைக் கெடுத்திடும்"
சொற்கள் எனக்கவை பஞ்சே
நாதம் அளித்திடுந் தண்டை ஒலித்திடு
நங்கை அணைத்திட அஞ்சேன்.
—இறைவன், புதுவை.

★

காதல் விளைத்திடு மாதின் முகத்திரு
கண்ணும் துளைத்தன நெஞ்சை,
சாதல் தவிர்த்திடும் அன்னுள் தமிழ்மொழி
தாவி உளத்தினிற் கொஞ்சும்
சீதக் கடல்மதி தோன்றும் பொழுதினில்
தோழா அவள்முகம் கண்டேன்
மோதித் தழுவிடும் தென்றல் அவள்தரும்
மேனிச் சுகமெனக் கொண்டேன்.
—தமிழ்க்கோவன், புதுவை.

★

மோதும் அலைகட லோரம் ஒளிதரு,
மின்னற் கொடியென வந்தாள்
காதல் விளைத்திடு மாதின் முகத்திரு
கண்ணுந் துளைத்தன நெஞ்சை.
நாதச் சிரிப்பொலி சிந்திச் சிலையென
நின்ருள் தளிருடல் காட்டிக்
காதற் கடல்தனில் வீழ்ந்தோம்! விழித்தபின்
கண்டேன் கனவென நானே!
—இர. மனோகரன், சென்னை-12.

★

காத லுறுந்தமி ழன்னை துயர்ப்படக்
கண்டு கொதித்திடு வேளை
காதல் விளைத்திடு மாதின் முகத்திரு,
கண்ணுந் துளைத்தன நெஞ்சை
மோது தமிழ்ப்பகை மோதி மடித்திட
மாது விடுகணை ஏற்பேன்;
சாதல் உறவரின் சால நலமெனச்
செந்தமிழ்க் கீவனென் மூச்சே!
—அ. இரத்தினசாமி, கோவிலூர்.

★

ஏதம் விளைத்திடு கிளியை யோட்டிடும்
பெண்ணின் கவண்விடு கல்லாய்
நாதன் நம்மவன் வல்வில் ஓரியின்
நாடே புகழ்ந்திடும் வில்லாய்
ஈதல் இசைபட வாழ்தல் எனுமொழி
எண்ணுர் இடைப்படும் சொல்லாய்க்
காதல் விளைத்திடு மாதின் முகத்திரு
கண்ணுந் துளைத்தன நெஞ்சை
—வே. இரா. சிவஞானவள்ளல், வேலூர்.

★

காதல் உலத்தினில் மோதும் அலையெனக்
கன்னி நினைவினை வாட்டக்
கோதில் வளமுடைக் காவில் நுழைந்ததும்
கோதை புனற்குடங் கொண்டு
போதை விளைத்திட மான்போல் நடந்திடும்
போதில் கணையெனப் பாய்ந்து
காதல் விளைத்திடு மாதின் முகத்திரு
கண்ணுந் துளைத்தன நெஞ்சை.
—சா. கா. சாகுல்அமீது,
சித்தையன்கோட்டை.

★

காதல் விளைத்திடு மாதின் முகத்திரு
கண்ணுந் துளைத்தன நெஞ்சை!
காதல் சுரந்திடு மாதின் இதழினைக்
கவ்விச் சுவைத்தனன் கள்வன்;
பாதை மறந்தனன்; மாதின் வயிற்றினில்
பைய முளைத்திடச் சான்றே;
பேதை நினைத்தனள்; சாவே சுகமென
மானம் நிலைத்திட அந்தோ!
—தமிழன்பன், காரைக்குடி.

★

காதல் விளைத்திடும் மாதின் முகத்திரு
கண்ணுந் துளைத்தன நெஞ்சை!
காதல் திருமணம் மாதின் விருப்புடன்
காணத் துடித்தனிப் பஞ்சை
பேதம் விளைத்திடும் பித்தர் பலருடைப்
பொல்லா வினையினுல் நெஞ்சில்
சாதல் சிறப்பென வாதம் வலியுறச்
சாகக் குடித்தனன் நஞ்சை.
—தி. சீனிவாசன், குல்லூர்ச்சந்தை.

நாதம் இழைத்திடு பாதம் சிவந்திட
நங்கை நுழைந்தனள் பள்ளி;
பாதி விழிதனில் பாவை எழில்தனைப்
பார்த்து மகிழ்ந்தனன் நம்பி;
காதல் விளைத்திடு மாதின் முகத்திரு
கண்ணுந் துளைத்தன நெஞ்சை
கோதை சிரித்திடக் காளை நெருங்கிடக்
கூவி அழைத்தது மஞ்சம்.
—எழிலூரான், சுந்தராபுரம்.

★

மாதர் குழாத்திடை மேலாய் விளங்கிடு
மையார் விழியுடைத் தையல்
பாதச் சிலம்பணி ஓசைப் படாமலே
பைய நடந்துமுன் செல்லக்
காதல் விளைத்திடு மாதின் முகத்திரு
கண்ணுந் துளைத்தன நெஞ்சை
மோதும் அலைத்திரள் போல வுணர்ச்சிகள்
முட்டின வென்னுளந் தன்னில்.
—ந. இராமசாமி, சித்தயன்கோட்டை.

★

ஓதும் தமிழக்குறள் காதல் இலக்கிய
ஒண்மை வடிவென நின்ருள்!
காதல் விளைத்திடு மாதின் முகத்திரு
கண்ணுந் துளைத்தன நெஞ்சை
கீதத் தமிழ்பயில் கிள்ளை மொழியிலே
கள்ளின் மயக்கினைக் கண்டேன்
மோதும் அலைநிகர் காதல் உணர்வொடு
மங்கை கரத்தினைக் கொண்டேன்!
—வெ. வடிவழகன், சிந்தாதிரிப்பேட்டை.

★

காதல் விளைத்திடு மாதின் முகத்திரு
கண்ணுந் துளைத்தன நெஞ்சை
சீத முறத்திகழ் கோதில் உதட்டெழு
தெண்ணீர் தெளித்தது நஞ்சை,
சூது நிகர்த்தன போதம் விளைத்தன
தொல்லை கொடுத்தன நின்றே;
ஏது வெனத்திகழ், போது நிறத்துடல்
என்னை இழுத்தது தோழா!
—கும்பகோணத்தான், வசந்தபுரம்.

★

ஏதம் தினைத்துணை யின்றி மனத்திடை
இன்னல் அழிந்திட இன்பக்
காதல் விளைத்திடு மாதர் முகத்திரு
கண்ணுந் துளைத்தன நெஞ்சை
காதற் செறிவளை யாளின் திருமொழி
கானக் குயில்மொழி போன்றே
த்தில் நனிமிகும் இன்ப வெறிதனைத்
தந்தே இழுத்ததும் ஏனோ ?
—செ. கி. செயராமன், செம்மியமங்கலம்.

★

மாதர் புகழ்ந்திடும் மாதின் எழிலெனை
மாய்க்கக் கிளம்பிய கூற்ருே ?
மாதின் சிரிப்பொலி நெஞ்சைப் பிளந்திட
மட்டுக் கிடைத்திடக் கொஞ்சும்
காதல் விளைத்திடு மாதின் முகத்திரு
கண்ணுந் துளைத்தன நெஞ்சை
ஆதங் கிடைத்திடப் பாசம் பெருகிட
அன்புற் றிணைந்தன வுள்ளம்!
—மு. கோவிந்தராசன், கூத்தங்குடி.

★

காதல் விளைத்திடு மாதின் முகத்திரு
கண்ணுந் துளைத்தன நெஞ்சை
நாதம் எழுப்பிடு வீணை நரம்பென
நாளும் மயக்கிடு மேனும்
பேதம் விளைத்திடு சாதிப் பகுப்பினைப்
பாரில் அகற்றிடக் காணும்
வேதனை மாய்ந்திட நன்னிலை எய்திடச்
சாதனை புரிவாய் நெஞ்சே.
— கே. எஸ். நீலகண்டன், கேசவபுதூர்.

★

காதல் விளைத்திடு மாதின் முகத்திரு
கண்ணுந் துளைத்தன நெஞ்சை
ஏது கிடைத்திட மோதும் சிரிப்பினில்
ஏங்கி இரங்கிடும் நெஞ்சைக்
கோதி அணைத்திட மீதி எழிலினைக்
கொஞ்சிப் பருகிட நாமும்
சாதல் தவிர்ந்தநற் காதல் முகட்டினில்
சடுதியில் நிற்போம்; வாவா!
—நா. இளங்கீரன், திருவையாறு.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு.